ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

क्षीराम्भोधेर्भवति गरळे लोकदाहोन्मुखे द्राक्
तत्तादृक्षप्रथितकृपया तच्च पीतं यथेश ।
तस्या मत्कं कियदिदमहो पापबृन्दं प्रभो ते
त्यक्त्वा पापी त्वमिति कुटिलां वाचमेनं पुनीहि ॥ १२ ॥

𑌕𑍍𑌷𑍀𑌰𑌾𑌮𑍍𑌭𑍋𑌧𑍇𑌰𑍍𑌭𑌵𑌤𑌿 𑌗𑌰𑌳𑍇 𑌲𑍋𑌕𑌦𑌾𑌹𑍋𑌨𑍍𑌮𑍁𑌖𑍇 𑌦𑍍𑌰𑌾𑌕𑍍
𑌤𑌤𑍍𑌤𑌾𑌦𑍃𑌕𑍍𑌷𑌪𑍍𑌰𑌥𑌿𑌤𑌕𑍃𑌪𑌯𑌾 𑌤𑌚𑍍𑌚 𑌪𑍀𑌤𑌂 𑌯𑌥𑍇𑌶 ।
𑌤𑌸𑍍𑌯𑌾 𑌮𑌤𑍍𑌕𑌂 𑌕𑌿𑌯𑌦𑌿𑌦𑌮𑌹𑍋 𑌪𑌾𑌪𑌬𑍃𑌨𑍍𑌦𑌂 𑌪𑍍𑌰𑌭𑍋 𑌤𑍇
𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌪𑌾𑌪𑍀 𑌤𑍍𑌵𑌮𑌿𑌤𑌿 𑌕𑍁𑌟𑌿𑌲𑌾𑌂 𑌵𑌾𑌚𑌮𑍇𑌨𑌂 𑌪𑍁𑌨𑍀𑌹𑌿 ॥ ௧௨ ॥

ஹே ஈச! ஹே சந்திரசேகர! திருப்பாற் கடலிலிருந்தும் எல்லாவுலகங்களேயும் சீக்கிரத்தில் தஹிப்பதில் ஸமர்த்தமான காலகூடவிஷமானது உண்டானகாலத்தில் அந்த விஷத்தை எங்கும் பிரஸித்திபெற்ற மஹிமைபொருந்திய தங்களுடைய யாதொரு கருணேயால் பானம் செய்தீரோ! அந்த உம்முடைய கருணேக்கு ஹே பிரபோ! என்னுடைய இந்த பாப ஸமூஹமானது மிகவும் அற்பமானதேயாகும். ஆகையால் நீ பாபீ உன்னே ரக்ஷிக்கமுடியாதென்கிற வக்ரமானஇந்தவார்த்தையைச் சொல்லி ஏமாற்ருமல் என்னே அவசியம் பாது காக்கவேண்டும்.

மூவுலகங்களேயும் ஒரே க்ஷணத்தில் தஹிக்கும் சக்தி பெற்றதாயும் பிரும்மா முதலான விண்ணவர்களேயும் பயந்து ஓடும்படி செய்ததாயும் மிகவும் குரூரமாயுமிருந்த விஷத்தை யாதொரு உம்முடைய கிருபையால் உடனே உட்கொண்டு ஸகல ஜகத்தையும் ரக்ஷித்தீரோ, அவ்வித மஹிமைவாய்ந்த உமக்கு என்னுடைய பாபகர்மா அற்பலேசம்தான் ஆகும். இதை ஒரு காரணமாகக் கொண்டு என்னேக் கைவிடாமல் சீக்கிரமாகப் பரிபாலிக்க வேண்டுமென்று ஒரு பக்தர் வேண்டுகிருர். சுபம்!

உபபத்திராதிபர்.

# ஆர்யதர்மம்.

விபவ-ஹூ ஆடி-மீ உருஉ

## ஸிருஷ்டிக்கிரமம்.

இந்தப்பிரபஞ்சத்தின் ஸிருஷ்டி, ஒருபிரம்மபட்டம் முடிந்து மற்றொருவர் அந்தப் பட்டத்திற்கு வரும் காலமாகிய ஸிருஷ்டிகாலத்தில் பரமேசுவரனிடமிருந்து ஏற்படுகின்றதாம். இதில் பிரம்மதேவரது ஒரு பகற்காலமான ஒரு கல்ப்பம் முடிந்தவுடன் தொடங்கும் அவரது இரவுகாலத்தில் பூலோகம், புவர்லோகம், ஸுவர் லோகம், ஆகிய மூன்று லோகங்களும் ஜலத்தில் மூழ்கி விடுகின்றனவாம். இது நைமித்திகப் பிரளயமெனப் படுகின்றது. அச்சமயத்தில் தேவர்கள், ரிஷிகள் முதலாயினோர் மஹர்லோகம் முதலிய லோகங்களுக்குச் சென்று விடுகின்றனராம். பிரம்ம தேவரது இரவு முடிந்து அவரது பகற்காலந் தொடங்கும்போது ஜலத்தில் மூழ்கிக் கிடக்கின்ற பூமி முதலிய லோகங்களை ஸ்ரீ மஹா விஷ்ணு வாராஹாவதாரம் செய்து உத்தாரணம் செய்து, அவைகளிருக்கவேண்டியபடி ஸ்தாபனம் செய்கின்றார். இது விஷ்ணு புராணத்தில்,

तोयान्तस्स महीं ज्ञात्वा जगत्येकार्णवे प्रभुः ।
अनुमानात्, तदुद्धारं कर्तुकामः प्रजापतिः ॥
अकरोत्स तनूमन्यां कल्पादिषु यथा पुरा ।
मत्स्यकूर्मादिकां तद्वद्वाराहं रूपमास्थितः ॥

𑌤𑍋𑌯𑌾𑌨𑍍𑌤𑌸𑍍𑌸 𑌮𑌹𑍀𑌂 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌜𑌗𑌤𑍍𑌯𑍇𑌕𑌾𑌰𑍍𑌣𑌵𑍇 𑌪𑍍𑌰𑌭𑍁𑌃 ।
𑌅𑌨𑍁𑌮𑌾𑌨𑌾𑌤𑍍, 𑌤𑌦𑍁𑌦𑍍𑌧𑌾𑌰𑌂 𑌕𑌰𑍍𑌤𑍁𑌕𑌾𑌮𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿𑌃 ॥
𑌅𑌕𑌰𑍋𑌤𑍍𑌸 𑌤𑌨𑍂𑌮𑌨𑍍𑌯𑌾𑌂 𑌕𑌲𑍍𑌪𑌾𑌦𑌿𑌷𑍁 𑌯𑌥𑌾 𑌪𑍁𑌰𑌾 ।
𑌮𑌤𑍍𑌸𑍍𑌯𑌕𑍂𑌰𑍍𑌮𑌾𑌦𑌿𑌕𑌾𑌂 𑌤𑌦𑍍𑌵𑌦𑍍𑌵𑌾𑌰𑌾𑌹𑌂 𑌰𑍂𑌪𑌮𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ॥

என்பதாதி வசனங்களால் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. இவ்விதம் பூமி முதலிய லோகங்கள் ஸ்தாபிக்கப்பட்டபின் பரமேசுவரனுடைய ஆக்ஞையினால் நித்திரையினின்று எழுந்திருந்த பிர

ம்மதேவர் ஓர் ஸிருஷ்டி செய்கின்றார். இது அவாந்தர ஸிருஷ்டி யெனப்படும். மஹாகல்ப்பாரம்பத்தில், முன் பிரளயத்தில் பரமேசுவரனிடம் அபின்னமாயடங்கியிருந்த மாயை, ஈசுவரனுக்கு ஈக்ஷணம் (அறிவு) காமனை (இச்சை) பிரயத்னம் "இவைகளுண்டாவதற்கு முந்தி பிராணிகளுடைய பரிபக்குவமான கர்மவசத்தால் வேறுபட்டுத் தோன்றுவது முதலாவது ஸிருஷ்டியாம். இது புத்திபூர்வகமாயில்லாதபடியால், அபுத்திபூர்வகஸிருஷ்டி எனப்படுகின்றது. அப்பொழுது மாயையினது முக்குணங்களும் பிரிந்ததாக ஆகவில்லை. அத்தகைய மாயையினின்று ஸமஷ்டிபுத்தியெனப்படும் மஹத்தத்வமுண்டாயிற்று.' இது இரண்டாவது. அதற்குப்பிறகு ஸமஷ்டி அஹங்காரம் உண்டாயிற்று. இது மூன்றாவது. இந்த அஹம்தத்துவமென்பது வைகாரிகம், தைஜஸம், பூதாதியென வழங்கப்பட்ட ஸாத்துவிகம், ராஜஸம், தாமஸம், என்ற பேதத்தால் மூன்று வகைப்படும். அவற்றுள் ராஜஸாஹங்காரத்தோடு கலந்த ஸாத்துவிக அஹங்காரத்தினின்று மனதும், ஞானேந்திரியங்களும், கர்மேந்திரியங்களுமுண்டாயின. இது நான்காவது. பூதாதியெனப்படும் தாமஸாஹங்காரத்தினின்று: பஞ்சதன்மாத்திரைகளெனப்படும் அபஞ்சீகிருதபூதங்களுண்டாயின. இது ஐந்தாவது. பின்பு பஞ்சீகரணம் செய்யப்பட்டுஸ்தூலபூதங்களும்," இந்திரியங்களுக்கு அபிமானிகளான தேவர்களும் ஸிருஷ்டிக்கப்பட்டார்கள். இது ஆறாவது. இவ் வாறு விதமான ஸிருஷ்டிகளும் பரமேசுவரனால் செய்யப்பட்டவைகளாம். இது பாகவதத்தில்,

षडिमे प्राकृतास्सर्गा वैकृतानपि मे शृणु ।

ஷடிமே ப்ராக்ருதாஸ்ஸர்கா வைக்ருதாநபி மே ஶ்ருணு ।

என்பதாதி வசனங்களால் நிரூபிக்கப்படுகின்றது. இந்த ஸிருஷ்டிக் கிரமம் ஸாங்கிய மதத்தையனுஸரித்த பிரகாரமாகும். ஔபநிஷதமதப் பிரகாரம் வேறுவிதமாகும். அது மற்றோர் ஸமயத்தில் நிரூபிக்கப்படும். பரமேசுவரனால் செய்யப்பட்ட இவ்வாறு ஸிருஷ்டிகளும் பிராக்ருத ஸிருஷ்டி யெனப்படும். இதுவும் சுருக்கமாகக் கூறப்பட்டது. இதன் விரிவு வேறிடம்காண்க. இதுபோல் பிரம்மதேவராலும் ஆறுவகைப்பட்ட ஸிருஷ்டிகள் அவாந்தர ஒவ்

வொரு பகற்காலம் தொடங்கும்பொழுது செய்யப்படுகின்றன. அதற்கு வைகிருத ஸிருஷ்டியென்று பெயர். அதில் முதலாவது அபுத்தி பூர்வகமான ஸிருஷ்டியாம். அதாவது நித்திரைவிட்டெழுந்திருந்தவுடனே பிரம்மதேவருக்கு ஒன்றும் தோன்றாமலிருந்த ஸமயத்தில் தமோமயமான இந்த ஸ்ருஷ்டி உண்டாயிற்றாம். தமஸ் என்பது அவித்யையாகும். அது தமஸ், மோஹம், மஹாமோஹம், தாமிஸ்ரம், அந்ததாமிஸ்ரம் என ஐவகைப்பட்டதாம். தமஸ் அவிவேகமென்றும், மோஹம் அந்தக்கரணப்பிரமமென்றும், மஹாமோஹம் சிற்றின்பவிருப்பமென்றும், தாமிஸ்ரம் கோபமென்றும், அந்ததாமிஸ்ரம் மரணமென்றும் வியாக்யானம் செய்யப்பட்டிருக்கின்றது. இவ்விதம் தானறியாமல் ஸ்வயமாகவே தோன்றிய இதையறிந்து பிரம்மதேவர் இது புருஷார்த்தத்திற்குபயோகப்படாதே என்றாலோஜித்து வேறு ஸ்ருஷ்டி செய்ய ஆலோசித்தபொழுது, தண்ணீர்விட்டபோது செழித்தும் வெட்டும்போது வாடியுமிருப்பதால் உள் நினைவுள்ளதாயிருப்பது போல் தோன்றினும், ஸுகத்திற்கு உபாயமின்னதென்றும் துக்கத்தை விலக்க ஸாதனமிதுவென்றும், தெரிந்துகொள்ளச் சக்தியற்றதாதலின் உள்ளும் வெளியும் உணர்ச்சியற்றதும், ஒரு வியாபாரமும் செய்யமுடியாததுமான விருக்ஷங்களின் ஸ்ருஷ்டி உண்டாயிற்றாம். இது முக்கிய ஸ்ருஷ்டியெனப்படுகின்றது. இது இரண்டாவது. இதுவும் புருஷார்த்தத்தை ஸாதித்துக்கொள்ளச் சக்தியற்றதாகவே தோன்றிவிட்டதே. வேறு ஸ்ருஷ்டிப்போம் என்று பிரம்மதேவர் ஆலோஜிக்கும்போது, பசு முதலிய திர்யக் ஜாதிகள் உண்டாயினவாம். இது மூன்றாவது. இவைகளும் புருஷார்த்தஸாதனங்களையனுஷ்டிக்கப்போதுமான கருவிகளற்றதாய் துக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றனவே. அதனாலிவைகளுமுபயோகப்படமாட்டாது. வேறு ஸ்ருஷ்டிப்போம் என்று ஆலோஜித்தபோது ஒரே ஸத்துவகுணம் நிறைந்தவர்களும் மிகுந்த ஸுகத்தையே பெரும்பாலும் அனுபவிப்பவர்களுமான தேவர்களை ஸ்ருஷ்டித்துவிட்டார். இது நான்காவது. ஸாத்விகர்களாய் சுகம் நிறைந்தவர்களாயினும் கர்மாதிகாரம் இல்லாதவர்களாயிற்றே. இதுவும் போதாது. வேறு ஸ்ருஷ்டிப்போம் என்று கருதும்போது பரமேச்வரனுடைய ஆக்ஞையினால் மனுஷ்யர்கள் ஜனித்தார்கள். இது ஐந்தாவது. இதில் பிரும்மதேவர் திருப்தி

அடைந்தார். பிறகு பூதப்பிரேதாதிகளை ஸ்ருஷ்டித்தார். இது ஆறாவது. இந்த ஸ்ருஷ்டிக்கிரமத்தில் கர்மாதிகாரம்பெற்று சிரேயஸ் ஸாதனங்களையனுஷ்டிக்கப்போதுமான ஸம்பூர்ணகருவிகளையடைந்த மனுஷ்யர்களைஸ்ருஷ்டித்தபிறகுதான் தன்னுடைய ஸ்ருஷ்டிவியாபாரம் ஸபலமாயிற்று என்று பிரம்மதேவரே ஸந்தோஷமடையும்படியான கிடைப்பதற்கரிய மானிடப்பிறவியையடைந்தவர்கள் பிரம்மதேவாது ஸந்தோஷம் உண்மையாக ஆகும்படி அவரவர்க்குறிய சிரேயஸ்ஸாதனங்களையனுஷ்டித்து யாவரும் மேன்மேலும் ஸுகித்திருப்பார்களாக. சுபம்.

பத்திராதிபர்.

---

# "உபதேசபஞ்சகம்"

(319-வது பக்கத்தொடர்ச்சி.)

ब्रह्मानन्दरसानुभूतिकलितैः पूतैस्सुशीतैर्युतैः
युष्मद्वाक्कलशोज्झितैः श्रुतिसुखैर्वाक्यामृतैस्सेचय ।
सन्तप्तं भवतापदावदहनज्वालाभिरेनं प्रभो
धन्यास्ते भवदीक्षणक्षणगतेः पात्रीकृताः स्वीकृताः ॥

ப்ரஹ்மாநந்தரஸாநுபூதிகலிதை: பூதைஸ்ஸுசீ
தைர்யுதை: யுஷ்மத்வாக்கலசோஜ்ஜிதை: ச்ருதிஸு
கைர்வாக்யாம்ருதைஸ்ஸேசய । ஸந்தப்தம் பவதாபதாவதஹ
நஜ்வாலாபிரேநம் ப்ரபோ தந்யாஸ்தே பவதீக்ஷணக்ஷணகதே:
பாத்ரீக்ருதா: ஸ்வீக்ருதா: ।

எதற்குமேல் சிறந்த ஆனந்தம் கிடையாதோ, எது அழிவற்றதோ, எதைப்பெறவேண்டுமென்கிறஆவல்கொண்டுபலமஹான்கள் இரவும் பகலும் சிரமப்படுகிறார்களோ, அவ்வித பிர்மானந்தரஸத்தைத் தாங்கள் நன்கனுபவித்து அதின் ஸாரத்துடன் கூடியதாயும் மிகவும் பாவனமாயும், சீதளமாயும், சிரவணம் செய்வதற்கு சுகமாயும் விளங்கும் தங்களுடைய வாக்கென்கிற கடத்திலிருந்தும் வெளியிடப்பட்ட வாக்கியமென்கிற அமுதப் பிரவாகத்தால் ஹே பிரபோ ! ஸம்ஸார தாபமென்கிற காட்டுத்தீயின் ஜ்வா

லைகளால் நன்கு தாபத்தை அடையும்படி செய்யப்பட்ட என்னை ஸ்னானம் பண்ணும்படி செய்யவேணும். எவர்கள் தங்களுடைய மஹிமை பொருந்திய திருஷ்டிக்கு ஒரு க்ஷணகாலம் பாத்திரமாக ஸ்வீகரிக்கப்படுகிறார்களோ அவர்கள் மிகவும் தன்யர்களாகிறார்கள்.

कथं तरेयं भवसिन्धुमेतं का वा गतिर्मे कतमोऽस्त्युपायः ।
जाने न किंचित् कृपयाऽव मां प्रभो संसारदुःखक्षतिमातनुष्व ॥

𑌕𑌥𑌂 𑌤𑌰𑍇𑌯𑌂 𑌭𑌵𑌸𑌿𑌨𑍍𑌧𑍁𑌮𑍇𑌤𑌂 𑌕𑌾𑌵𑌾 𑌗𑌤𑌿𑌰𑍍𑌮𑍇 𑌕𑌤𑌮𑍋𑌽𑌸𑍍𑌤𑍍𑌯𑍁
𑌪𑌾𑌯𑌃। 𑌜𑌾𑌨𑍇 𑌨 𑌕𑌿𑌂𑌚𑌿𑌤𑍍 𑌕𑍃𑌪𑌯𑌾𑌽𑌵 𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌭𑍋 𑌸𑌂𑌸𑌾𑌰
𑌦𑍁𑌃𑌖𑌕𑍍𑌷𑌤𑌿𑌮𑌾𑌤𑌨𑍁𑌷𑍍𑌵॥

ஹே பிரபோ ! கரையில்லாமலிருக்கும் ஸம்ஸாரமென்கிற இந்தக் கடலை நான் எப்படித் தாண்டுவேன். எனக்குத் தங்களைத் தவிர வேறு கதி எது. வேறு உபாயம்தான் என்ன இருக்கிறது. அற்பங்கூட இருப்பதாகத் தெரியவில்லை. தங்களுடைய இயற்கையான கருணையால் என்னைப் பாதுகாக்கவேணும். எனக்கேற்பட்டிற்கும் ஸம்ஸாரதுக்கத்தை அடியோடு தாங்கள் விலக்கவேண்டும்.

இவ்விதம் பக்தியுடன் அறிவிக்கும் சீடனுக்கு குரு கூறும் மறுமொழியாவது:—

माभैष्ट विद्वन् तव नास्त्युपायः संसारसिन्धोस्तरणेऽस्त्युपायः ।
येनैव याता यतयोऽस्य पारं तमेव मार्गं तव निर्दिशामि ॥

𑌮𑌾𑌭𑍈𑌷𑍍𑌟 𑌵𑌿𑌦𑍍𑌵𑌨𑍍 𑌤𑌵 𑌨𑌾𑌸𑍍𑌤𑍍𑌯𑍁𑌪𑌾𑌯𑌃 𑌸𑌂𑌸𑌾𑌰𑌸𑌿𑌨𑍍𑌧𑍋
𑌸𑍍𑌤𑌰𑌣𑍇𑌽𑌸𑍍𑌤𑍍𑌯𑍁𑌪𑌾𑌯𑌃। 𑌯𑍇𑌨𑍈𑌵 𑌯𑌾𑌤𑌾 𑌯𑌤𑌯𑍋𑌽𑌸𑍍𑌯 𑌪𑌾𑌰𑌂
𑌤𑌮𑍇𑌵 𑌮𑌾𑌰𑍍𑌗𑌂 𑌤𑌵 𑌨𑌿𑌰𑍍𑌦𑌿𑌶𑌾𑌮𑌿॥

ஸம்ஸாரதுக்கம் மிகக்கொடியது. அதை சீக்கிரம் விலக்கவேண்டுமென்று மிகவும் பக்தி சிரத்தையுடன் தம்மிடம் வந்து இவ்விதம் பிரார்த்திக்கிறபடியால் இவன் சிறந்த பண்டிதனென்று கருதி குரு, வித்வன், என்று ஸம்போதனம் செய்கிறார். எதை அவச்யம் அறியவேண்டுமோ, அதை அறியமுயற்சிக்கிறபடியால்இவன் பண்டிதன் என்று குருவின் அபிப்பிராயம். இவ்விதம் அருகிலழைத்து உனக்கு உபாயம் ஒன்றும் தெரியவில்லை என்று பயப்படாதே. ஸம்ஸார ஸமுத்திரத்தைத் தாண்ட உபாயமிருக்கிறது.

எந்த மார்க்கத்தால் யதிகள் இதைத் தாண்டியிருக்கிறார்களோ அந்த மார்க்கத்தை நான் உனக்கு உபதேசிக்கிறேன் என்று கூறினார்.

இவ்விதம் பிரியத்துடன் அழைக்கும் கருணைக்கடலான ஆசார்யரை அடைந்து அவர்களுடைய அனுக்ரஹரூபமான சிறந்த உபதேசங்களை எவ்விதமிருந்து கிரஹிக்க வேண்டுமென்பதை அறிவிக்கிறார்.

प्रतिदिनं तत्पादुके सेव्यताम् ।

𑌪𑍍𑌰𑌤𑌿𑌦𑌿𑌨𑌂 𑌤𑌤𑍍𑌪𑌾𑌦𑍁𑌕𑍇 𑌸𑍇𑌵𑍍𑌯𑌤𑌾𑌂

ஒவ்வொரு நாளும் அந்த மஹான்களுக்குக் கால் பிடிப்பது முதலான சுச்ரூஷைகளைச்செய்துகொண்டு கிரஹிக்கவேண்டும். இந்த அபிப்பிராயத்தை,

आविद्याग्रहणाच्छिष्यश्शुश्रूषेत् , प्रयतो गुरुम् ॥ नारदः ।

𑌆𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌗𑍍𑌰𑌹𑌣𑌾𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌯𑌶𑍍𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑍇𑌤𑍍 𑌪𑍍𑌰𑌯𑌤𑍋 𑌗𑍁𑌰𑍁𑌂 ॥

ஒரு சிஷ்யன் எவ்வளவு காலம் வரையில் குருவினிடம் வித்யாக்ரஹணம் செய்கிறானோ, அவ்வளவு காலமும மிகவும் பரிசுத்தனையிருந்துகொண்டு குருவுக்கு சுச்ரூஷை செய்ய வேண்டுமென்று நாரதர் கூறியிருக்கிறார்.

गुरुशुश्रूषया विद्या पुष्कलेन धनेन च ।
अथ वा विद्यया विद्या चतुर्थं नोपलभ्यते ॥ स्मृतिः ॥

𑌗𑍁𑌰𑍁𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑌯𑌾 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌪𑍁𑌷𑍍𑌕𑌲𑍇𑌨 𑌧𑌨𑍇𑌨 𑌚 ।
𑌅𑌥𑌵𑌾 𑌵𑌿𑌦𑍍𑌯𑌯𑌾 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑌂 𑌨𑍋𑌪𑌲𑌭𑍍𑌯𑌤𑍇 ॥

ஒருவன் ஒரு குருவினிடமிருந்து வித்யையை கிரஹிக்க வேண்டுமானல் அவருக்குப் பணிவிடை செய்வது, அல்லது அதிகமான பொருளைக் கொடுப்பது, அல்லது தன்னிடமிருக்கும் வித்யையை அவருக்கு உபதேசித்து அவரிடமிருப்பதைக் கிரஹிப்பது என்கிற இம்மூன்றுகளில் யாதாகிலுமொன்றைச் செய்துதான் கிரஹிக்க வேண்டும். இவைகளை விட்டால் நான்காவது மார்க்கம் வேறில்லை என்கிறார். இவைகளிலும் குரு சுச்ரூஷை என்பதைமுந்திக்கூறியிருப்பதால் குருவிற்கு சுச்ரூஷை செய்து வித்யாக்ரஹணம் செய்வதுதான் சிறந்ததென்று நன்கு வெளியாகின்றது. மைற்ற

இரண்டுகளையும் நடத்துவதற்கு ஒரு ஸமயம் யோக்கியதை இல்லாமலுமிருக்கலாம். இதற்கு அவ்விதம்கூற நியாயமில்லை. யாரும் சக்தர்களாகவே இருப்பார்கள், ஆகையால் தான் நம் பரமாசார்யாள் பாதுகா ஸேவனம் என்று சுச்ரூஷை செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இவ்விதம் எதற்காக சாஸ்திரம் விதிக்கின்றதென்று சிலர் ஸந்தேஹிக்கலாம். அது ஸரியல்ல. ஒருவரிடமிருந்து நாம் ஒரு உபகாரத்தைப் பெற்றால் அதற்குப்பதிலுபகாரத்தை நம்மாலியன்ற வரையில் செய்து தான் பெற வேண்டும், ஸாமான்யமான உபகாரத்தைச் செய்தவர்களுக்கே இவ்விதமிருந்தால் அக்ஞான நிவர்த்திக்கு முக்கிய ஸாதனமான ஆத்மவித்யோபதேசம் செய்யும் மஹான்களுக்கு எவ்விதம் நாம் செய்தாலும் அதற்குப் பிரதியாகமாட்டாது. ஆனாலும் நம் சக்தியை அனுஸரித்து அவச்யம் பணிவிடை செய்தால்தான் அவர்களால் உபதேசிக்கப்பட்ட வித்யையின் பயனை நாம் பெறலாம் என்று கூறியிருக்கிறது. சுபம்! (இன்னும் வரும்)

உபபத்திராதிபர்

---

## இவ்வருஷம் சூரியக்கிரஹணத்தைப்பற்றிய ஸம்சயம்.

நாளது விபவ-ஹூ ஐப்பிசி-மீ 28உ திங்கள்கிழமை ஸூர்ய கிரஹணம் சம்பவிப்பதாக அடியில் குறித்த விவரப்படி அநேக பஞ்சாங்கங்களில் காணப்படுகிறது. ஸித்தாந்த பஞ்சாங்கம் 7, வாக்கியம் 7, திருக்கணிதம் 2, ஆக 16 பஞ்சாங்கங்களைப் பரிசோதித்ததில் வாக்கியத்தில் 28-நெம்பர் கஞ்சனூர் அண்ணுவய்யங்கார் பஞ்சாங்கம் 1. 6-நெம்பர் பால்குரிசி குமாரஸாமி அய்யர் பஞ்சாங்கம் 1. இவ்விரண்டில் மட்டும் அமாவாஸ்யையில் கிரஹணம் பிடித்து பிரதமையில் விடுகிறதாக எழுதியிருக்கிறார்கள். மற்ற 14பஞ்சாங்கங்களிலும் பிரதமையிலேயே பிடித்து பிரதமையிலேயே விடுவதாய் எழுதியிருக்கிறார்கள். நிற்க பிரதமையில் கிரஹணம் பிடிக்கிறதாக சாஸ்திரம் உண்டா? அமாதிதி என்றைக்கு? என்பது தெரியவேண்டியதாய் இருக்கிறது. இவ்விடம் பெரியோர்களை விசாரித்ததில் இதுவரையில் பிரதமையில் கிரஹணம் பிடித்து விட்டதாகக் கேட்டதில்லை. பர்வாந்தியத்தில் பிடித்து பிரதமையில் விடுவது வழக்கமாயிருக்கிறது என்கிறார்

இவ்வருஷம் சூரியக்ரஹணத்தைப்பற்றிய ஸம்சயம் [illegible]கள். கணகாநந்தம் (गणकानन्दम् ഗണകാനന്ദമ്) கசரதர்ப்பணம் (खचरदर्पणम् ഖചരദര്പ്പണമ്) தைவக்ஞவிலாஸம் (दैवज्ञविलासम् ദൈവജ്ഞവിലാസമ്) இதயாதி கிரந்தங்களில் பர்வாந்தியத்தில் கிரஹணம் சொல்லப்பட்டிருக்கிறதேயன்றி ப்ரதமையில் கிரஹண ஸ்பர்சம் சொல்லப்படவில்லை. ஆனால் ஏதோ இரண்டொரு பஞ்சாங்கங்களில் ப்ரதமையில் ஸ்பர்சமாகிறதென்றிருந்தால் பஞ்சாங்கத்தின் தவறு, அச்சுத்தவறு என்று சொல்லலாம். ஸுமார் 20-க்கு மேற்பட்ட பஞ்சாங்கங்களில் ப்ரதமையிலேயே பிடித்து ப்ரதமையிலேயே விடுவதாய் இருக்கிறது. இதில் பெரிய பெரிய கணிதக்ஞர்கள் இருப்பதால் ப்ரதமையில் பிடிப்பதாகச் சொல்லுவது தவறென்று சொல்லக்கூடவில்லை. ஆனால் ப்ரதமையில் கிரஹணம் பிடிக்கும் என்று எந்த கிரந்தத்தில் இருக்கிறதோ அதைமட்டும் அறியவிரும்புகிறேன்.

இந்தக் கிரஹணவிஷயமாய் 3—7—28-ல் சுதேசமித்திரன் பத்திரிகையில் ராமநாததீக்ஷிதரவர்கள் ப்ரதமையில் கிரஹணம் பிடிப்பதுண்டா? அமாதிதி என்றைக்கு? என்ற ஸம்சயத்தைக் குறித்து விபரம் தெரிவிக்கவேணுமென்று கேட்டிருக்கிறார்கள். அதற்கு பதில் 12—7—28-ல் பண்டிட் K. தேவராஜசாஸ்திரிகள் அவர்கள் ப்ரதமையில் கிரஹணம் பிடிக்குமென்று சாஸ்திரமிருக்கிறது. சென்ற அக்ஷய-௵ மாசி-௴ 24௳யிலும் பிரமாதி-௵ ஆடி-௴ 5௳யிலும் விகுருதி-௵ ஆனி-௴ 5௳யிலும் ஸம்பவித்த மூன்று ஸூர்யக்கிரஹணங்கள் பிரதமையில் பிடித்து பிரதமையில் விட்டிருக்கிறது, பார்த்துக்கொள்ளலாம் என்று பத்திரிகையில் எழுதியிருக்கிறார்கள். மேற்படி மூன்றுவருஷ பஞ்சாங்கங்களை எடுத்துப் பார்த்ததில் மேற்படி மூன்று கிரஹணங்களும் அமாவாஸ்யையில் பிடித்து ப்ரதமையில் விட்டிருப்பதாய்த் தெரிகிறது. நான் பார்த்த ஷை பஞ்சாங்கங்கள் என்னிடமுள்ள கஞ்சனூர் அண்ணுவய்யங்கார் பஞ்சாங்கங்கள்.

இவ்விதம் ஸம்சயம் ஏற்பட்டு இருப்பதால் பண்டிதோத்தமர்கள் மேற்கண்ட ஸந்தேகம் நிவர்த்தியாகும்படி ஸூர்யக்கிரஹணத்தைப் பற்றியும் அமாதிதி என்றைக்கு என்பதைப் பற்றியும் தெளிவாய் நிர்ணயம்எழுதி ஆர்யதர்மத்தின் வாயிலாக வெளியிடவேணுமாய்ப் பிரார்த்திக்கிறேன். புதுவை. க. மார்க்கழய்யர்.

ஸ்ரீரஸ்து.

# விபவ-ஸூ ஆற்பிசி-மீ 28உ சூரியகிரஹணவிஷயங்கள்

## கீழ்வரும் பஞ்சாங்கங்களை பார்த்ததில் ஸந்தேகம்,

| விபரம் | பஞ்சாங்கம் | கணித்தவர் | மாதம் | தேதி | வாரம் | நாழி. விநாடி | க்ரகணம் | ஸ்பரிச காலம் | திதியின் விபரம் | இங்கி. தேதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஸித்தாந்தம் | சிருங்கேரி | சுப்ரமண்ய சித்தாந்தி | | 27உ | | அமா 17-44 | | 25-37 | சூன்யதிதி | |
| ஷை | நெல்லூர் | வெங்கிடசுப்ரமண்யசர்மா | | ,, | | ஷை 17- 4 | | 21-23 | பிரதமதிதி | |
| ஷை | திருப்பதி | ஸ்ரீமாநுஜாசாரி | | ,, | | ஷை 19-48 | | 23-40 | சூன்யதிதி | |
| ஷை | பட்டணம் | மார்க்கண்டேய சர்மா | | ,, | | ஷை 17-57 | | 23-43 | ஷை | |
| ஷை | ,, | நிம்மகட்டாபூர்ணமய்யர் | ஆற்பிசு | ,, | திங்கள் | ஷை 17-20 | | 23-43 | ஷை | |
| ஷை | ,, | நிம்மகட்டாஸ்ரீமய்யர் | | ,, | | ஷை 18- 3 | | 20-16 | அமாவாஸைதிதி | |
| ஷை | கோதாவரி | குப்த்தா | | ,, | | ஷை 18- 7 | | 24-22 | ஷை | |
| திருக்கணிதம் | கும்பகோணம் | விச்வநாத சாஸ்திரிகள் | | 28உ | | ஷை 22-19 | சூரியன் | 25-2 | அதிதி | 12—11—28 |
| வாக்யம் | புதுக்கோட்டை | கடலங்குடி ஸ்ரீநிவாசய்யங்கார் | | 27உ | | ஷை 22-57 | | 24-18 | அமாவாஸைதிதி | |
| 6-ரெ. | | அண்ணவய்யங்கார் | | ஷை | | ஷை 22-56 | | 24-46 | அதிதி | |
| திருக்கணிதம் | பட்டணம் | ஆனந்தகுணபோதினி | | 28உ | | ஷை 22-19 | | 24-22½ | திதி இல்லை. | |
| | ஆர்க்காடு | பெருமாளய்யர் | ஆற்பிசு | 27உ | திங்கள் | ஷை 21-55 | | 24-5 | அமாவாஸைதிதி | |
| | சேலம் | அய்யர் அவர்கள் | | ,, | | ஷை 22-15 | | 25-10 | ஷை | |
| 6-ரெ. | பால்குரிகை | குமாரய்யர் | | ,, | | ஷை 21-55 | | 20-16 | ஷை | |
| 28-ரெ. | கஞ்சனூர் | அண்ணவய்யங்கார் | | ,, | | ஷை 23-17 | | 20-6 | ஷை | |
| | மருத்துவக்குடி | குருமூர்த்தி அய்யர் | | ,, | | ஷை 22-56 | | 24-50 | ஷை | |

# சென்னை ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் மடத்தில் நடந்த ஸ்ரீகிருஷ்ணஜனன உத்ஸவம்.

ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகளின் அனுக்கிரஹத்தை முன்னிட்டு, சென்னை தம்புசெட்டித்தெரு 119-நெ. ஸ்ரீ சங்கரபகவத்பாதாளின ஸ்ரீ மடத்தில் சென்ற ஓர் ஆண்டாக பிரும்ம ஸ்ரீ. தர்மப்ரசாரக வெ. ஸோமதேவசர்மா அவர்களால் உபன்யஸிக்கப்பட்டுவரும் ஸ்ரீமத் பாகவதத்தில் சென்ற ஆனி மீ 31உ ஸ்திரவாரம் அன்று ஸ்ரீமத்பகவத் லீலைகளனைத்தும்அடங்கிய ஸ்கந்தம்(தசமஸ்கந்தம்) உபக்ரமிக்கப்பட்டது.

இவ்வாடிமீ 8உ ஸோமவாரத்தன்று மாலை 7-மணிக்கு ஸ்ரீ கிருஷ்ணஜனனம் என்கிற கட்டம் நடைபெற்றது. அச்சமயத்திற்கு முந்தியே வந்திருந்த பக்திமான்களுக்கும், பக்திமதிகளுக்கும், ஸ்ரீமடத்தில் இடம்போராமலிருந்தது. பிறகு உபன்யாஸகர் அவர்கள் ஸாயம் ஸந்தியை முடித்து உபன்யாஸ ஸ்தானத்தை அடைந்து "ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவுக்குப் பிறவி எதனுல்" என்ற ஸம்சயம் கொண்டவர்களின் ஸந்தேஹம் அற வெகு உறுக்கமாக உபன்யஸித்தார்.

## உபன்யாஸத்தின் சுருக்கம்.

நம்மைப்போல் பிறவிக்குக் காரணமான பூர்வகர்மவாசனை அவருக்கில்லாவிடினும்பக்தர்களை அனுக்கிரஹிக்கவும், துஷ்டர்களை சிக்ஷிக்கவும், சிஷ்டர்களைஸம்ரக்ஷிக்கவும், தனது மாயாசக்தியினுல் பிறவியற்றவராய் இருப்பினும் சரீரமெடுத்தவர்போல் தோன்றுகின்றுர். ஆகவே ஸ்ரீ தேவகியினிடம் அவள் செய்த புண்ணிய விசேஷத்திற்கு இணங்கி பக்தவத்ஸலரான ஸ்ரீ பகவான் கர்ப்ப யாதனையை அனுபவியாது வேதத்தில் கூறியவண்ணம் 'மனிதர்களின் இடைக்கு மேலுள்ள பாகமனைத்தும் பரம பவித்திரம் என்றெண்ணி, அத்தேவகியின் ஹிருதய ஆகாசத்தில் நிர்மலமாய் தேஜோரூபமாய் 10-மாதம் தங்கியிருந்து, காலம் நிறைய வெளியில் தோன்றினுர். கிழக்கு திக்காகிற ஸ்திரீயினிடம் தோன்றும் சந்திரனுக்கு எங்ஙனம் அந்த ஸ்திரீயினுடைய கர்பப்பையில் வாஸமானது கிடையாதோ, அதுபோல் இங்கு தேவகியினிடம் பரமாத்மா ஸ்ரீ கிருஷ்ணனுக்கு கர்பவாஸம் கிடையாதென்றும், விரிவாக இன்னும் பல திருஷ்டாந்தங்களைக் காட்டி ஸ்ரீ பகவதவதாரத்தை 8½-மணியோடு நிறுத்தினுர்.

பிறகு ஸ்ரீ சங்கரபகவத்பாதாளுக்கும், ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவுக்கும், தூபதீப நைவேத்யங்கள் நடந்தன.

பிறகு வேதகோஷத்துடன் ஸ்ரீ சங்கரபகவத்பாதாளின் ப்ரஸாதம் உபன்யாஸகருக்கு ஆசீர்வாதத்துடன் அருளப்பட்டது. பிறகு பக்தர்கள் தங்கள் தங்களது பாரிதோஷிகத்தையும் அளித்தனர். பிறகு எல்லோருக்கும் ஸ்ரீ பகவத்ப்ரஸாதம் விநியோகமும் வழங்கப்பட்டது.

பிறகு ஸப்யர்கள் எல்லோரும் ஸ்ரீ சங்கரருடைய சரணகமலங்களில் விநயபுரஸ்ஸரமாய் தங்களது பக்தியையும் வந்தனத்தையும் செலுத்தி, சரீரச்ரமத்தை சிறுதும் பாராட்டாது, தூமசகடம் நின்ற காலத்திலும் மாம்பலத்திலிருந்து பாதாசாரமாகவோ அல்லது மற்றும் ஏதாவது அந்தந்த காலத்திற்கேற்ற பஸ் முதலிய சகடத்தின் உதவியினாலோ வந்து, ஸ்ரீபகவத்கீதை ஸ்ரீமத்பாகவதம் இவைகளின் ஸாரத்தை எளிதாய் எல்லோருமறியும்படி உபன்ஸிப்பவரும், இதுபோன்ற தர்மகைங்கரியத்தில் ஈடுபட்டுள்ளவருமான ஸ்ரீமதுபன்யாஸகருக்கு சரீர தார்ட்யத்தையும், ஆரோக்கியத்தையும், பூர்ண ஆயுளையும், அளிக்கும்படி ஸ்ரீமச்சங்கரபகவத்பாதாளின்பூர்ணமான அனுக்ரஹத்திற்கு ஹேதுவாயுள்ள சரணபத்மங்களை பிரார்த்தித்தனர். பிறகு ஹரிஹர ஸ்மரணையுடன் ஸப்யர்கள் கலைந்தனர்.

கௌண்டின்யன், தீ. ராமனாத தீக்ஷிதன்.

---

## பிராம்மண தர்மாபிவர்த்தினீஸபை. கோவில் வீரட்டம்

இந்த ஸபையின் விசேஷக்கூட்டமொன்று (2—7—28) திங்கள் கிழமை மாலை 7-மணிக்குக் கூடியது. வியாஸபூஜையின் பெருமையையும் குருபக்தியின் மேன்மையையும்பற்றி மகா-௱-௱-ஸ்ரீ வ. சு. நடேசய்யரவர்களால் வெகு அழகாக உபந்யஸிக்கப்பட்டது. சில ஆஸ்திக நேயர்கள் வந்திருந்து ஸபையை நன்கு நடைபெறச் செய்தார்கள். இத்துடன் இங்கு சுற்றுப்பக்கங்களிலுள்ள அக்கிரஹாரங்களில் பல ஸபைகள் ஏற்படுத்தி ஸனாதனவைதிக தர்மாபிவிருத்திக்கான எல்லாவித ஸௌகர்யங்களையும் மிக்க ஊக்கத்துடன் நடத்திவைக்கத்தக்க அறிவு, ஒழுக்கமுள்ள பெரியோர்களைக்கொண்டு பிரசாரம் செய்யவேண்டுமென்று ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இரவு 9-மணிக்கு வந்தனோபசாரத்துடன் ஸபை இனிது முடிந்தது. சுபம்.

K. R. சுப்ரமணியசாஸ்திரியள்.